# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2010
ஐப்பசி 14
துல்ஹஃதா 9
புதன் (31-10-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 43
விலை சதம் 50


## சுயாட்சிக்கு பாஸ்க் தேசம் அங்கீகாரம்

ஸ்பானியாவின் வடபகுதியிலுள்ள பாஸ்க், கற்றலோன் பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்குவது சம்பந்தமாக கடந்தவியாழனன்று நடைபெற்ற வாக்கெடுப்பின்போது சுயாட்சியை அங்கீகரித்து பாஸ்க் கற்றலான் மக்கள் வாக்களித்தனர். இந்தச் சுயாட்சி அமைப்பின்கீழ் பாஸ்க் கற்றலான் பிரதேசங்களுக்குத் தனித்தனி பாராளுமன்றம் இருக்கும். பொலிஸ். கல்வி, சுகாதாரம், உல்லாசப்பயணத்துறை நீதித்துறை ஆகியன இந்த அமைப்புகளின் பொறுப்பில் விடப்படும்.

பாஸ்க் பிரதேசத்துக்கு தனிநாடு கோரிதீ விரமான போராட்டம் நடைபெற்று வரும் அதே வேளையில்ஸ்பானிய அரசு பாஸ்க் பிரதேசத்துக்கு சுயாட்சி வழங்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேமதாசா அமிர்தலிங்கம் கதிரவேற்பிள்ளை சொல்லாடல்!

பிரதமர்:— தமிழினம் சிங்கள இனம் என்று ஏன் பிரித்துப் பேசுகிறீர்கள்? உலகம் ஒன்றுபட முனையும்போது நீங்கள் பிரிந்து செல்ல முயற்சிக்கிறீர்கள்? இது யதார்த்தமானதா?

அமிர்தலிங்கம்:— ஏனென்னில் எமக்கு சமத்துவ நிலை மறுக்கப்பட்டுள்ளது;

பிரதமர்;— சமத்துவமில்லையென்று உங்களுக்குள் ஏன் ஒரு கற்பனையை உண்டாக்கிக் கொள்கிறீர்கள்?

அமிர்தலிங்கம்:— அதுகற்பனையில் கூறப்படுவதல்ல,

சி. கதிரவேற்பிள்ளை: உங்களைப்போலவே எமக்கும் மக்களின் கட்டளை ஒன்றுண்டு.

பிரதமர்:— சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த நாட்டை ஆண்டபோதுதான் அந்தக்கட்டளையைக் கேட்டீர்கள். யூ,என்.பி. ஆட்சிக்குவரும் என்று நீங்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

கதிரவேற்பிள்ளை:— (இரண்டு ஆட்சிக்கும்) எந்தவித மாற்றமும் கிடையாது;

—ஹன்சார்ட் (4-10,79)

# 'நோர்வே நாட்டு உதவிகள் தமிழ்ப்பகுதிக்கும் கிடைக்க வழிசெய்க!'

## நோர்வே அரசிடம் வைகுந்தவாசன் கோரிக்கை!



நோர்வே அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் உதவிகள், இலங்கையின் தமிழ்ப்பகுதிக்கும் கிடைப்பதற்கு வழிவகை செய்யுமாறு அண்மையில் நோர்வே நாட்டுக்கு விஜயம் செய்திருந்த லண்டன் தமிழர் இணைப்புக் குழுவின் அமைப்பாளர் திரு. கிருஷ்ண வைகுந்தவாசன், நோர்வே வெளிநாட்டமைச்சு அதிகாரிகளிடம் கோரியுள்ளார். அத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் நோர்வேயின் சர்வதேச பொருளாதார சமூக அபிவிருத்தித் திணைக்கள டைரக்டர் ஜெனரல் திரு. பால் பொக் அவர்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தையும் சந்திக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்—

இது சம்பந்தமாக திரு. வைகுந்தவாசன் சுதந்திரனுக்கு எழுதியிருப்பதாவது: "ஈழத்தமிழர்களின் இலட்சியம் மீது அனுதாபம் கொண்டிருக்கும் உலக நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும். அக்டோபர் முதல் திகதியிலிருந்து ஒருவார காலமாக, நோர்வேயில் உள்ள ஒவ்வொரு புதினப் பத்திரிகையும் முன்பக்கத்தில் ஈழத்தமிழர் பிரச்சினையொட்டியே தலைப்புச் செய்திகளை வெளியிட்டன. இத்துடன் தொலை நோக்கியிலும் (டெலிவிசன்) வானொலியிலும் தமிழர் இலட்சியம் குறித்து பிரசாரம் செய்யப்பட்டது.

"இப்படியெல்லாம் திடீரென்று ஒரு நிலை ஏற்படுவதற்கு காரணமுண்டு. இலங்கை காரைநகர் திட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக வேலை செய்துவிட்டு, நோர்வே திரும்பிய ஒரு நோர்வேஜியன் தம்பதிகள், தாம் இலங்கையில் தத்து எடுத்திருந்த ஒரு பெண் குழந்தையையும் அழைத்து வந்தனர், இந்தப் பெண் குழந்தை இலங்கையில் நாடற்றவராக்கப்பட்ட தமிழினத்தைச் சேர்ந்தவள். பெயர் செல்வி ஜாவாமரியநயினர் இவளைத்தத்தெடுத்திருந்தோர் திரு. சாண்ட்விக் தம்பதிகளாவர்.

"இவர்கள் நோர்வேக்கு கூட்டிவந்த இந்தவளர்ப்புப் பெண்ணை, நாடு கடத்தும்படி நோர்வே அரசு உத்தர விட்டது. ஆனால் நோர்வே அரசின் இந்த உத்தரவுக்கு

—4ம் பக்கம் பார்க்க

## "சிங்களப் பாடசாலைக்கு அரசின் தாராளம்!"

### கல்வி அதிகாரி பாராட்டு

"யாழ் மாவட்டத்தில் 560 தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன; இரண்டு இலட்சத்துக்கு அதிகமான பிள்ளைகளும் 641 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். ஆனால் இங்கு மூன்று சிங்களப்பாடசாலைகளும் 754 சிங்கள மாணவர்களும்: 50 சிங்கள ஆசிரியர்களும்இருக்கிறார்கள். விகிதாசார முறைப்படி பார்த்தால் வருடமொன்றுக்கு ஆயிரம் ரூபாதான் எமக்கு மானியமாகக் கிடைக்க முடியும்: அப்படியிருக்க அரசு எம்க்குப் பிரத்தியேகமாக பணத்தை ஒதுக்கியுள்ளதை நாம் மனதில் கொண்டு நல்ல முறையிற் செயற்பட வேண்டும்"

—கல்வி அதிகாரி நெல்சன் எதிரி சூரியா யாழ் சிங்கள மகா வித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டப அடிக்கல் நாட்டு விழாவில் பேசியது.

—(ஆதாரம்:— ஈழநாடு 25.10.79)

# புதிய தமிழ் ஊழியரும் சிங்களமும் அரசின் கொள்கையில் மாற்றமில்லை!

## பாராளுமன்றத்தில் பிரதியமைச்சர் அறிவிப்பு!

1956ம் ஆண்டுக்குப் பின்னர் அரசசேவையில் சேர்ந்த புதிய தமிழ் ஊழியர்கள் சிங்களமொழித் தேர்ச்சிப்பரீட்சையில்சித்தியடைந்தால் மட்டுமே அவர்கள் சேவையில் உறுதிப்படுவார்கள், சிங்கள ஊழியர்கள் சேவையிலுறுதிப்படுத்தப்படுவதற்கு இவ்வாறான மொழித்தடை எதுவும் கிடையாது, தமிழ் ஊழியர்கள் மீது மட்டுமே பாரபட்சமாக இம்மொழிச் சுமைகடந்த 23 ஆண்டுகளாக திணிக்கப்பட்டு வருகிறது. இதனால்அரச சேவையிலிருந்து நீக்கப்பட்ட தமிழர்கள் பலநூறுபேர்:

புதிய தமிழ் ஊழியர் சம்பந்தமாக பாரபட்சமான கொள்கையையே ஜே-ஆர்-ஜெயவர்த்தனவின் தார்மீக அரசும் கடைப்பிடிக்கிறது: புதிய தமிழ் ஊழியர்களுக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்டுவரும் இந்த அப்பட்டமான பாரபட்சத்தை அகற்றுவதற்கு ஜே. ஆர். அரசு இன்னும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பழைய மொழி ஏகாதிபத்தியக் கொள்கையையே கடைப்பிடிக்கிறது.

இந்த உண்மை அண்மையில் பாராளுமன்றத்தில் நல்லூர் பா,உ திரு: மு.சிவசிதம்பரம் கேட்ட கேள்வியொன்றுக்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் திரு.பேர்ஸி சமரவீரா அளித்த பதிலிலிருந்து அம்பலமாகிறது.

தமிழ்க்கிராமசேவசர்சிங்களமொழியில்தேர்ச்சிபெறவில்லையென்பதற்காக அவருக்கு ஒய்வூதியம் மறுக்கப்பட்டது சம்பந்தமாக திரு சிவசிதம்பரம் கேள்வியெழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்து திரு. சமரவீரா கூறியதாவது;—

"குறிப்பிட்டகிராமசேவகருக்கு ஒய்வூதியம் கொடுக்கும்படி பணிக்கப்பட முடியாது. இவர் ஓய்வு பெறும் பொழுது உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருக்கவில்லை, சிங்கள மொழித்தேர்ச்சியை முன்னிட்டு உறுதிப்படுத்தப்படாத ஒரு உத்தியோகத்தரை உறுதிப்படுத்தப் பட்டவராகக் கருதுவதற்கு எந்தத்தீர்மானமும் எடுக்கப்படவில்லை!'

ஆக புதிய தமிழ் ஊழியர் பிரச்சினையில் அதே பழைய மொழிக் கொள்கையையே தார்மீக அரசும்பின் பற்றுவது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

நெடுங்கேணியிலும்

## இராணுவ முகாம்

நெடுங்கேணி நில அளவைத் திணைக்கள கட்டடத்தில் இராணுவ முகாம் அமைக்கப் பட்டிருக்கிறது: ஒட்டு சுட்டான், முத்தையன்கட்டு. முள்ளியவளை, புளியங்குளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த இராணுவ முகாம் அமையும்:

(தினபதி 22-10,79)



# தமிழ்நாட்டு அரசியல் எங்கே போகிறது?

இம் மாதம் 26ந் திகதி தொடக்கம் இருவாரங்களுக்கு தமிழ் நாடு அரசு கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது.

முந்திய கூட்டத் தொடரின்போது தமிழ்நாடு சட்டசபைக் கட்சிகளின் நிலை வேறு, இன்று வேறு. முந்திய தொடரில் அ,தி.மு.க.வுடன் இந்திராவும், தி மு,கவுடன் ஜனதாவும் இணைந்திருந்தன, இன்றோ இந்திரா—தி,மு.க. வுடனும்,ஜனதா—அ தி.மு.க.வுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளன;

"இடைக்காலத் தேர்தல் நடக்கும் இன்றைய காலகட்டத்தில் இந்திரா காங்கிரசுடன் தி. மு. க. கூட்டு வைத்துக்கொள்ள முன்வந்ததற்குக்காரணம்,நாட்டின் அரசியல் அரங்கில் பொதுவாக ஏற்பட்டுள்ள மாறுதலாகும் என்றார் கலைஞர் கருணாநிதி: இவர்இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமாவர்;

ஆட்சியிலிருக்கும் முதல்வர் எம்.ஜி. ஆரோ இந்திராவுடன் தேர்தல் உடன்பாடு செய்ய டில்லி சென்று காபந்து பிரதமர் சரண்சிங்குடன் பேச்சுவார்த்தை நடாத்தி அடுத்ததாக இந்திராவுடன் பேச நேரமும் குறித்திருந்தார். சரண்சிங்குடன் பேசியபின் மனமாற்றத்துடன் இந்திரா காங்கிரசுடன் பேசாது தமிழகம் திரும்பினார். சரண் சிங் அரசில் அ. தி. மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மந்திரிகளாகப் பதவி வகித்து வருவதுகுறிப்பிடத்தக்கது.

தஞ்சை இடைத்தேர்தலில் முதலில் இந்திராவைப் போட்டியிடுமாறு அழைத்து பின்னர் இந்திராவை போட்டியிடுவதினின்றும் வாபஸ்பெறுமாறு கேட்டதை இந்திரா மறந்து விடவில்லை.

ஏற்கெனவே இந்திராவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது தி. மு, க. 16-9-79 அன்று புது டில்லியில் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி, தேர்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். தமிழகத்திலுள்ள 40 தொகுதிகளில் 23தொகுதிகளில் இந்திரா காங்கிரசும் ஏனைய 17 தொகுதிகளில் தி,மு க.வும் அதன்தோழமைக்கட்சிகளும் போட்டியிட இருக்கின்றன.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த தமிழக முதல்வர் எம். ஜி, ஆர். லோக சபையில் எதிர்க்கட்சியாக விளங்கும் ஜனதாவுடன் திடுதிப்பென்று தேர்தல் உடன்படிக்கை செய்துள்ளார். இதன் பின்னரும் காபந்து பிரதமர் சரண்சிங் மந்திரி சபையில் அ. தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் மந்திரிப் பதவி வகித்து வருகிறார்கள்.

1977 தேர்தலில், இந்திராவை சர்வாதிகாரியென்றும், சதிகாரியென்றும் மக்களால் ஒதுக்கி வைக்கப் பிரசாரம் செய்த ஜனதா, 1979ல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது பதவிகள் பறிபோகாமலிருக்க இந்திராவிடம் தஞ்சம் புகுந்தனர்.

பரம எதிரியான மொரார்ஜி பதவி இழக்க காரணமாக இருந்தவர் இந்திரா. சரண்சிங் அரசமைத்தபோது முதலில் ஆதரவு தருவதாகக் கூறிப் பின்னர் சரண்சிங்கைத்தடம் புரள வைத்தவர் இந்திரா; அதன் பின் ஜெகஜீவன் தலைமை தாங்கும்ஜனதா தனக்கு ஆதரவு தருமாறு இரந்து திரிந்ததும் நாடறிந்த தொன்று. எனவே இந்திராவின் "இம்மேஜ்"சை மீண்டும் இந்தியாவில்பிரகாசிக்க வைத்திருப்பவர்கள்



இரண்டு ஜனதாவினருமாவர்.

தமிழ் நாட்டில் செல்வாக்குள்ளவராக இந்திரா இருப்பதை எம். ஜி, ஆர், அறியாதவரல்லர். நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் எம். ஜி. ஆர். ஆதரவு தராமலே 27இடங்களை இந்திரா காங்கிரஸ் வைத்திருக்கின்றது.

எம். ஜி. ஆரோ மத்தியில் ஸ்திரமான அரசை அமைக்கும் எக்கட்சியுடனும் சேர்வதற்குத் தயாராக இருக்கின்றார். எம், ஜி. ஆர். இதுவரை செய்து வந்த செயல்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும். அவர் எப்போது என்ன செய்வாரென்று அவரது கட்சிக்காரர்களுக்கே தெரியாமலிருக்கிறது.

## புத்தொளி

இந்திராவின் கூட்டால் லோகசபைத் தேர்தலில் தி.மு.க., காமராசரின் பெயரையும், இந்திராவின் பெயரையும், அண்ணாவின் பெயரையும் சொல்லி வாக்குப் பெறலாமென்று கலைஞர் கணக்குப் போட்டு வெற்றி பெற்றிருக்கிறார், முஸ்லீம் லீக்கும் தி. மு, க. வுடன் இணைந்து நிற்கின்றது.

தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் பலத்தைக் கவனிப்போம்.

| | |
|---|---|
| அ.தி.மு,க.. | 125 |
| தி.மு.க. | 48 |
| இந்திரா காங்கிரஸ்— | 27 |
| ஜனதா | 08 |
| இடது கம்யூனிஸ்ட் | 12 |
| வலது கம்யூனிஸ்ட் | 05 |
| தேசிய போவர்ட் பிளக் | 02 |
| காந்தி காமராசர் காங்கிரஸ் | 02 |
| உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி | 02 |
| முஸ்லீம் லீக் | 01 |
| காலி இடங்கள் | 02 |

தமிழக சட்டசபையில் மொத்தம் 234 இடங்கள் இருக்கின்றன. மூக்கையா தேவர் (போவர்ட் பிளக்) சுப்பராமன் (அ,தி மு.க.) இருவரும் இறந்து விட்டனர். இதனால் இரு காலி இடங்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கும்போது முதலில் அ. தி. மு. க. உறுப்பினர் எஸ். எஸ். இராமசாமி தி. மு. க. வில் சேர்ந்தார். பின்னர் தி. மு. க. உறுப்பினர் ஓ. கே. சகாயம் அ. தி,மு.க.வில் சேர்ந்தார். அதனால் அ.தி.மு.க, தி.மு.க. கட்சிகளின் பலம் முன்பு போல் இருக்கின்றது.

இக்கூட்டத் தொடரில் 9 அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்படும். பல மசோதாக்களும் தாக்கலாகும்.

தேர்தல் வருவதை உணர்ந்து முதல்வர் மது விலக்குச் சட்டத்தை தளர்த்த முன்வந்திருக்கிறார். மது விலக்குத்தமிழகத்தில் வந்து ஓராண்டாகின்றது. இத் தடைச்சட்டத்தால் எண்ணற்றவர் கைதானார்கள். சிலருக்குச் சிறைத்தண்டனை



யும் கிடைத்தது. இதனால் அ.தி மு.க. வுக்கிருந்த ஆதரவு ஆட்டங் காண்பதை உணர்ந்த முதல்வர் புதிய சட்டமொன்றைக்கொண்டு வந்து மக்கள் ஆதரவைத் திரட்டதிட்டமிட்டுள்ளார்.

இச்சட்டத்தின்படி மது குடித்துக் கைதானவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். மது குடிக்கக்கூடாது என்று கூறிய சட்டம் இனி மது குடிக்கலாம் ஆனால் கலாட்டா செய்யக்கூடாது என்று தெரிவிக்க இருக்கின்றது.

இன்று நாடாளுமன்ற இடைத்தேர்தலை விட எம். ஜி. ஆருக்கு சட்டமன்றத்தைப் பற்றியே அதிக கவலை கண்டிருக்கிறது. அதனால் தான் அவர் குழம்பிப்போயிருக்கிறார்.

கலைஞர் கருணாநிதி காரிய வீரர். எதற்கும் எந்த நேரமும் தயாராக இருப்பவர். எந்த நேரம் எந்தக் காயை நகர்த்தினால்எதிரி வீழ்வான் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர். இதில் இவர்கைராசிக்காரர். கலைஞருடன்கூட்டுச் சேர்ந்துள்ள இந்திராவோமத்திய ஆட்சி இரண்டையும் அடுத்தடுத்துக் கவிழ்த்த கைராசிக்காரர்.

சிக்மகளூர் தேர்தலின் பின்னும், இரு பிரதமர்களை தடம்புரள வைத்ததன் பின்னும் இன்று இந்திய அரசியலில் இந்திரா காவியநாயகியாகத் திகழ்கிறார்.

இந்திராவின் கையும் (கட்சிச் சின்னம் கை) கலைஞரின் விரித்த கையும் (உதய சூரியன் சின்னம்) ஒன்று சேர்ந்துள்ளதால் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் மாத்திரமல்ல தமிழக சட்டசபையிலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று என்றே மக்கள் நம்புகிறார்கள்.

தமிழக சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சி அரசமைக்க இன்னும் ஆறு உறுப்பினர்களின் ஆதரவே வேண்டியுள்ளது. இக்கூட்டத்தொடரில் அநுசரிவரவில்லையானாலும் மத்தியில் இந்திரா ஆட்சியை அமைத்தபின்னராயினும் இந்தஉண்மைநிருபணமாகத்தான் போகிறது. பொறுத்திருந்து பார்ப்போமாக.

குறிப்பு: இக்கட்டுரையில் இடம்பெற்றிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளரின் கருத்துக்களே; —ஆர்

# "ஜனாதிபதி ஆணைக் குழுவினால் நன்மை கிடைத்தால் நாம் எதிர்க்கப்போவதில்லை! ஆனால் பூரண விடுதலையே எமது இலட்சியம்!"

## த. இ. பேரவை

## செயலாளர்

## சேனாதி பேச்சு

இலங்கை முழுவதும் நிர்வாகத்தைப் பரவலாக்கும் விடயமே ஜனாதிபதி கமிஷனில் ஆராயப்பட்டு வருகிறது. ஆனால் இவ்வாறு நிர்வாகம் பரவலாகுவதால் தமிழ் மக்கள் ஏதாவது நன்மைபெற்றால் அதைநாம் ஏன் எதிர்க்க வேண்டும்: கிடைப்பது கிடைக்கட்டும் ஆனால் நாம் அதற்காக விடுதலைப் போராட்டத்தைக் கைவிடமுடியாது. தமிழினம் விடுதலை பெறத்தொடர்ந்து போராடுவோம்.

இன்றையநெருக்கடியான நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீக்கும்படியும், யூ. என். பியை வெளியேற்றும்படியும் அரசியல் காரணங்களுக்காகப் பழிவாங்கப்படும் இளைஞரை விடுதலை செய்யும்படி கோரிப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கூட்டம் போடுவதையும் இயக்கம் நடத்துவதையும் நாம் வரவேற்கின்றோம்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், சமூகக் கல்விவட்டம் போன்ற இயக்கங்களுமே தமிழ் ஈழ இலட்சியத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றன. இவை சின்னஇயக்கங்களாக இருந்தும் சர்வதேச இடதுசாரி இயக்கங்களில் அங்கமாக இருக்கின்றன. இதனால் தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்ய இவர்களின் ஆதரவு எமக்கு அவசியமாகும். இதுமட்டுமல்லாமல் இலங்கையில் உள்ள ஏனைய இடதுசாரி இயக்கங்களும் தொழிற் சங்கங்களும் தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கையை அங்கீகரிப்பதன் மூலமே. இலங்கையின் ஒடுக்கப்பட்ட தேசியஇனமான தமிழ் இனமும் சிங்களத் தொழிலாளர் இனமும் சேர்ந்து முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராட வாய்ப்புண்டாகும்,

சோசலிச அரசொன்றை அமைத்தற்கு தமிழ் ஈழமே சாத்தியம் ஆக இருப்பதால் முதலில் மாக்ஸிஸ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட அனைத்துஇயக்கங்களும் தமிழீழத்தில் சோசலிச அரசை அமைக்க ஒன்றுபட்டுப் போராட அறைகூவல் விடுக்கிறேன்: இதன் மூலம் தென் இலங்கையிலும் சோசலிச அரசு ஒன்றை அமைக்க வாய்ப்பு உண்டாகும். அத்துடன் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் உதவியாக இருக்க முடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் ஈழ அரசில் சுரண்டல் ஒழிக்கப்படும்

—4-ம் பக்கம் பார்க்க

# ‘பழைய தலைவர்கள் விட்ட தவறை புதிய தலைவர்கள் திருத்திவிட்டனர்!’

“இலங்கைத்தீவிதுலுள்ள பிரச்சினை வகுப்புவாதமோ இனவாதமோ. அல்லள்இன வெறியோ அல்ல— அதற்கும் மேற்பட்ட பிரச்சினையாக நமது பிரச்சினை உருவெடுத்துள்ளது. இரண்டு தேசங்களுக்கிடையே உள்ள தொடர்பு அல்லது உறவுசம்பந்தப்பட்ட பிரச்சினைக்கே நாம் தீர்வு காண வேண்டியவர்களாக இருக்கிறோம்”

—இவ்வாறு கோப்பாய் பா.உ. சிந்தனைச்சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற ஐ.நா. தினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார் தனது பிறந்த நாளன்று 24-10-79 இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரு. கதிரவேற்பிள்ளை தமது உரையில் மேலும் கூறியதாவது;—

“இலங்கை இரண்டு தேசியஇனங்களைக்கொண்ட ஒருதீவு. ஆனால் 1833ம் ஆண்டு இலங்கையைக்கைப்பற்றி ஆண்ட ஆங்கிலேயன் தனது நிர்வாக வசதிக்காக இலங்கையை ஒரு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தான் அதன்பின்புதான் ஆங்கிலம் படித்த தமிழர்களும் சிங்களவர்களும் இலங்கையர் என்ற போலித்தனமான இனத்தை உருவாக்கமுயற்சித்தனர், ஆனால் தமிழ்,சிங்கள மக்களின் அடிப்படை உணர்ச்சியிலிருந்து அல்லது வரலாற்று அடிப்படையிலிருந்து இது எழாத காரணத்தால் இலங்கையர்என்றகற்பனை செயலிழந்து விட்டது, நண்பர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டதுபோலபழைய தலைவர்களும் சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினையாக தமிழ்—சிங்கள பிரச்சினையை அணுகிவந்தனர்.

ஆனால் இன்றைய தமிழ்த் தலைவர்கள் அந்தப் பழைய சிந்தனையை அடியோடு மாற்றி அமைத்து விட்டார்கள். இலங்கை இரண்டு தனித்தனி தேசிய இனங்களின் தாயகம் என்ற கருத்து இன்று அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளது-



ஐ, நா.

தினவிழாவில்

சிந்தனைச் சிற்பி

பேச்சு

“இலங்கைப் பிரச்சினை, சிறுபான்மை, பெரும்பான்மைப்பிரச்சினையுமல்ல இனவாதம் அல்லதுஇன வெறிப் பிரச்சினையுமல்ல— இரண்டு தேசங்களுக்கிடையேஉள்ள உறவு சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஓர்இனம்மற்ற இனத்தை ஆக்கிரமித்து ஆளுவதால் ஏற்பட்டுள்ளபிரச்சினை ஓர் இனத்தின் விருப்பத்துக்கு மாறாக அந்த இனம் ஆளப்படுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை இதுதான் உண்மையான நிலையாகும்.

“ஒரு தேசியஇனம் தனது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது நாட்டின் ஆதிக்கத்துக்குப் பொறுப்பாக இருப்பதே இறைமை என்பதாகும்.ஒரு நாட்டின் மீது மற்றோர் நாடு தனது படைபட்டாளங்களைக் கொண்டு வந்து குவிப்பது அப்பட்டமான ஆக்கிரமிப்பே.

இன்று ஐ.நா. சபை மக்கள்குழுக்களின் சுதந்திரத்தை நிலைநாட்ட எதுவித உதவியும் செய்ய முடியாத நிலையிலேயேயுள்ளது. ஆதலால் ஒவ்வொருமக்கள்குழு அல்லதுநாட்டினமும்பலாத்காரத்தின் மூலமே தமது உரிமைகளை நிலைநாட்டி வருகின்றன,

“ராஜாஜி கூறியதுபோல இறைமை என்ற சுவருக்குப் பின்னால் ஒருநாட்டில் கொடுமைகள் அநீதிகள் தலை தூக்குமானால் ஐ.நா சபை அதை வேடிக்கை பார்த்திருக்கக் கூடாது.அநீதியை துடைக்க உதவிபுரிய வேண்டும், இதற்கு ஐ.நா, சபைக்கு அதிகாரம் வேண்டும்!’

இவ்வாறு திரு. கதிரவேற்பிள்ளை கூறினார்.

## இன்று பண்டார வன்னியன் நினைவு தினம்:

# விடுதலை முரசொலித்த வீரத் தலைவன்

எட்டுத் திக்கும் கடலால் சூழ்ந்த எழில் மிகு ஈழத்திருநாட்டின் வடபகுதியிலே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவியாற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், கிழக்கே திருகோணமலையையும் எல்லைகளாகக் கொண்டு விளங்குவது வன்னிப் பிரதேசமாகும்.

வன்னிப் பிரதேசத்தின் வரலாற்றில் மன்னர்களின் வரிசையில் வன்னி மக்கள் மனதில் நீங்காது இடம் பெற்றவன் குலசேகர வைரமுத்து- பண்டாரவன்னியன் என்னும் தமிழ் மன்னனாவான். பிறந்த மண்ணில் பிறரை மிதிக்க விடாது வன்னிநாட்டைக்காத்த மன்னர்களில் இறுதி மன்னன் அன்னியருக்குஅடிபணியாது தன் இறுதி மூச்சிருக்கும் வரை ஏகாதிபத்திய வாதிகளின் ஏதேச்சை அதிகாரத்திற்கு அடங்காது ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாக விளங்கியவன். வந்தாரை வாழவைக்கும் வன்னித்திருநாட்டின் வணங்கா முடி மன்னனாகத்திகழ்ந்த அவன் “அஞ்சினருக்கு சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து ஆடவனுக்கு ஒருமரணம்” என்று கூறிநின்ற அஞ்சா நெஞ்சன் —வீரத்தின் சின்னம்—இலட்சியத்தின் உருவம்;

குளம்பல கொண்டு வளம் பல நிறைந்த வன்னிநாடு வீரம் செறிந்த மன்னன் பண்டாரவன்னியன் ஆட்சியின் கீழ் செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்தது. செந்நெலும் தேனும் தேக்கும் நிறைந்தும் மலிந்தும் கிடந்தது. இதனைக் கண்ட அந்நியர்கள்—கறுவா வாங்க வந்த கயவர்கள், பிரித்தாளும் தந்திரத்தையும் உறத்தல் மனப்பான்மையும்,நாடு பிடிக்கும் வேட்கையையும் ஒருங்கே அமையப்பெற்றவர்கள் வன்னிநாட்டின் மீது காதல் கொண்டனர். அதன் காரணமாக வன்னிநாட்டைத் தமது கையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று உறுதி பூண்டனர். வெள் அங்கியை கண்டவர் வீழ்ந்து விடுவர். “பண்டார வன்னியனை வென்று விடுவோம் வீரர் நாம்” என்று எண்ணி கப்பம் கேட்டனர். மாற்றானுக்கு மண்டியிட்டு பழக்கமில்லாதவன்— சொந்த பூமிக்காக உயிரையே பெரிதாக மதிக்காத உத்தமன் — சுதந்திர தாகி; பண்டாரவன்னியன் கப்பம் கொடுக்க மறுத்து மானம் கெட்டவனைத் துரத்த விடுதலைப்போர் தொடுத்தான்.

கற்பூரப் புல்வெளியிலே நடந்தபோரிலே ஆங்கிலேய படைகளை சின்னாபின்னமாக்கி புறமுதுகிட்டோடச் செய்தான். 1803ம் ஆண்டில் ஆங்கிலேய தளபதிகளால் அமைக்கப்பட்ட முல்லைத்தீவுக் கோட்டையைத்தாக்கி கப்டன் றிபேக் தலைமையில் உள்ள படைகளை பின்வாங்கச் செய்தான். அஞ்சிய ஆங்கிலப் படைகள் யாழ்ப்பாணம்— மன்னார் — திருகோணமலை என்னும் இடங்களிலிருந்து மும்முனைத் தாக்குதலைச் செய்தனர். எதற்கும் அஞ்சாது துணிச்சலோடு போராடி வெற்றி கொண்டான்.

நேருக்கு நேர் நின்று பண்டார வன்னியனைக்கொல்ல முடியாது என்று கண்ட பிரித்தாளும் தந்திரத்தையுடைய பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் கரிக்கட்டு மூலை அரசன் காக்கை வன்னியனை நாடினர். நாவல்லவர்கள் அல்லவா? நாடு பிடிக்கும் — நோக்கத்தால் ஆசைவார்த்தைகளை ஊட்டி காக்கை வன்னியனைத் தம்வசமாக்கினர். எட்டப்பர் கூட்டத்து வழித்தோன்றல் சுதந்திர உணர்ச்சியற்றவன் ஏதோ தருகிறோம் என்று கூறிய ஆசை வார்த்தைகளை நம்பி பண்டார வன்னியனையும் அவனது படைகளையும் காட்டிக் கொடுத்தான்,

நிராயுதபாணியாக நின்ற பண்டாரவன்னியனையும் அவனது படைகளையும் கண்ட ஏகாதிபத்திய வாதிகள் இதுதான் தக்க சமயமெனக் கண்டு துப்பாக்கி கொண்டு தாக்கினர். நிராயுதபாணியாக நின்றுங்கூட புறமுதுகிட்டு ஓடாது அவர்களை எதிர்த்துப் போராடினான். போர்த்தர்மத்தைப் புறக்கணித்து ஆங்கிலேயர் போராடியதால் இறுதியிலே தோற்கடிக்கப்பட்டனர்.

அன்னை பூமி அந்நியர் கையிலிருந்து காப்பாற்ற அயராது பாடுபட்ட பண்டார வன்னியனை 1803 அக்டோபர் 31ம் நாள் கற்சிலைமடுவிலே தோற்கடித்தனர். கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் தான் வாழ்ந்த பிரதேசத்தின் மீதுஅழியாத பற்றும் கொண்ட பண்டார வன்னியனை தோற்கடித்தமைக்காக கற்சிலைமடுவிலே தமது புகழை நிலைநாட்ட நினைவுச் சின்னமாக ஓர் கற்சிலையை அமைத்தனர். அக்கற்சிலை மாவீரன் பண்டார வன்னியனின்புகழைப் பாரெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமன்றி அவனைப்பற்றிக் கூறும் கர்ண பரம்பரைக் கதைகள் என்பதும் அவனது வீரத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

ஏகாதிபத்திய வாதிகட்கு அஞ்சாது தாய் நாட்டின் சுதந்திரத்தைக் காத்து தன் இறுதி மூச்சிருக்கும் வரை வனனி நாட்டில் ஓரடி மண்ணைக் கூட மிதிக்கவிடாது சுதந்திரமாக மிளிரச் செய்தான அத்தகைய வீரம் செறிந்த மன்னனுடைய நினைவு தினம் 31-10-1979 ஆகும். பண்டார வன்னியனது பரம்பரையிலே வந்த நாம் இன்றே பண்டார வன்னியன் விட்டுச் சென்ற விடுதலைப் பணியை ஏற்று காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர் கூட்டத்தை அழித்து எமது பிரதேசத்தில் ஓரடி மண்ணைக் கூட அன்னியருக்காக விடாது மீண்டும் சுதந்திர பூமியாக மிளிரச் செய்வோமாக!

வாழ்க பண்டாரவன்னியன்! வளர்க உன் புகழ்;

—க. தர்மலிங்கம்

யாழ்ப்பாணம்,
பல்கலைக்கழகம்,

# ‘உண்மைகள் உங்களை உறுத்தினால் அதற்கு நாமா பொறுப்பு?”

## பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லம்பு!

ஹரீந்திர கொறயா: பஸ்தியாம் பிள்ளையின் நிலை என்ன? அவர் கொலை செய்யப்பட்டதை நீங்கள் கண்டிக்கிறீர்களா?

அமிர்தலிங்கம்: நாம் பஸ்தியாம்பிள்ளைக்கு நடந்ததைக் கண்டித்திருக்கிறோம். இன்பத்துக்கும், செல்வரத்தினத்துக்கும் மற்றும் ஆறு பரிதாபத்துக்குரிய இளைஞர்களுக்கும் நடந்ததை எநத ஒரு கௌரவ உறுப்பினராவது இதுவரை கண்டித்திருக்கிறார்களா? யாராவது கண்டித்தீர்களா? பஸ்தியாம் பிள்ளை கொலையை நாம்ஏன் கண்டிக்கவில்லையென்று கேட்கும் நீங்கள். பொலிசார் மேற்கொண்ட இந்த மிலேச்சத்தனமான படுகொலைகளைக் கண்டித்தீர்களா? நான் கொலை செய்யப்பட்ட இளைஞர்களின் படங்களை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தேன், அந்தப் படங்களை நிச்சயமாக மந்திரிசபைஉறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பார்த்திருப்பார்கள்.

தர்மலிங்கம், 1977ஆம் ஆண்டு கொள்ளையடித்தவர்களை அவர்கள் கண்டித்தார்களா?

எம். சிவா: கொள்ளையரைப்பற்றிப் பரவாயில்லை— சீருடை அணிந்துள்ள இவர்களைக் கவனியுங்கள்.

அமிர்தலிங்கம். இன்றுவரை. எந்த ஒரு உயர்தர பொலீஸ் அதிகாரியோ அல்லது பொறுப்பு வாய்ந்த எந்த ஒரு அமைச்சரோ, அல்லது பொறுப்புவாய்ந்த எந்த ஒரு பின்வரிசை உறுப்பினரோ, மிலேச்சத்தனமான இக்கொலைகளையும் சித்திரவதைகளையும் கண்டித்ததுண்டா? நாம் ஆளப்படும் இனமாகவும், நீங்கள் ஆட்சிக்கட்டிலிலும் இருக்கிறீர்கள் என்பதற்காக, எமக்கு ஒரு சட்டம், உங்களுக்கு ஒரு சட்டம் இதிலே இருக்க முடியாது. எம்மீது செங்கல்லை வீசிவிட்டு அதை நாம் ஏற்றுக்கொண்டிருப்போம் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? நாம் நிச்சயமாக இந்தப் பொலிசார் கொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கிறோம். என்ன இருந்தாலும் அவர்களும் தமிழ் பொலிசார்தான்......

ஹரிந்திர கொறயா. நீங்கள் அதைச் சொன்னது உண்டா?

அமிர்தலிங்கம்: ஏன் இல்லை பல தடவை கூறியிருக்கிறேன். ஹன்சாட்டைப் படியுங்கள் நான் என்ன பேசுகிறேன் என்பதை நீங்கள் செவிமடுப்பதில்லை, எனது பேச்சை கவனிப்பதற்குப் பதிலாக என்னை நோக்கிச் சத்தம்போடுவதிலேயே நீங்கள் அக்கறையாக இருக்கிறீர்கள்.

சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி: அதை நீங்கள் மறந்துவிட்டீர்களா?

எம். சிவா: அவர் சவுக்கடியை மறந்து விட்டாரா? அவர் எமக்கெல்லாம் சவுக்கடிபோடஆசைப்பட்டவர்;

அமிர்தலிங்கம்: எமக்கு சவுக்கடி போட விரும்பியசாது அவர். அதுதான் அவரது தராதரம்;

★ ★

பிரேமதாசா: சில ஆர்வமுள்ளபிரிவினர்,இதையெல்லாம் சர்வதேசப்பத்திரிகைகளில் எமதுஅரசாங்கத்தின் பதிலின்றிப் பிரசுரித்து குழப்பத்தையும் குறும்புத்தனத்தையும் ஏற்படுத்தக் காத்திருக்கின்றனர். இது ஐரோப்பாவில் ஒரு பொய்ய தொழிலாகவே நடக்கிறது. இந்த ஆவணங்களை அவர்கள் பல்வேறு நிறுவனங்களுக்கும், கொம்பனிகளுக்குமவிற்று, தம்மை அகதிகளாகக் காட்டிக்கொண்டு உத்தியோகங்களும், அரசியல் அடைக்கலமும் பெறுகின்றனர்.

அமிர்தலிங்கம்; இந்தச் சம்பவங்கள் நடைபெறவில்லையென்று பிரதமர் மறுக்கிறாரா? இவை உண்மையாக இருந்தால் அந்த உண்மைகளை இச்சபையில் வைக்கவேண்டியது எனது கடமை;

பிரதமர்: நிலைமை என்னவென்றால்...... (குறுக்கீடு)

அமிர்தலிங்கம்; உண்மைகள் உறுத்துமானால் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

பிரேமதாசா, அது உறுத்தவில்லை. உறுத்தும் பிரச்சினையுமல்ல இது. சில ஆர்வமுள்ள பிரிவினரின் கைகளுக்குள் நீங்கள் சிககுகிறீர்கள்

அமிர்: இது மனிதாபிமானப் பிரச்சினை — எமது மக்களின் துன்பங்களை நான் கண்டுள்ளேன்.

பிரதமர்; இந்தச் சம்பவங்களை விசாரிப்பதற்கு என ஒரு தெரிவுக்குழுவை அரசு நியமித்துள்ளது.

அமிர்: பொலீஸ் அதிகாரிகள் கொலை செய்யப்படும் போது. அவசரகாலச் சட்டம் திணிக்கப்படுகிறது! பிரஜைகள் கொல்லப்படும் போது தெரிவக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

பிரதமர்! பிரிகேடியர் வீரதுங்கா பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள நிலை முன்னேற்றமடைந்துள்ளது.

அமிர்: பிரிகேடியர் வீரதுங்கா யூலை 17ம் திகதி பொறுப்பேற்றார்: அவர் பொறுப்பேற்பதற்கு முந்தியே கொலைகள் இடம்பெற்றன. அவை நடைபெற்றது யூலை 13-ம் திகதி இரவு, ஆனல் அவர் பொறுப்பேற்ற பின்னரும், இந்தச் சித்திரவதைகளும், ஏனைய சம்பவங்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

பிரேமதாசா: 12 7.79க்குப் பிறகு தாலிக்கொடி அறுப்பும்வீடுடைப்புக்களும் இடம்பெறவில்லை.

அமிர்! பிரதமர் எனது பேச்சைத் தொடர இடம் அளிக்க வேண்டும்.

பிரதமர்: நான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, ஆனல் நான் கூறவது இதுதான்......(குறுக்கீடு)

அமிர்: நான் இங்கு பேச விரும்புவதைப் பேசுவதற்கு எனக்கு உரிமையுண்டு. எனக்குள்ள அந்த உரிமையை நான் வலியுறுத்துகிறேன். எனது பேசும் உரிமையை கட்டுப்படுத்த வேண்டாம்.

(ஹன்சார்ட் 4-10-79 அவசர காலச்சட்ட விவாதத்தின்போது)

## ‘நோர்வே நாட்டு--

—1-ம் பக்கத் தொடர்

எதிராக, நோர்வே முழுவதும் தேசிய அடிப்படையில் நாடு தழுவிய இயக்கம்நடைபெற்றதன் விளைவாக, நோர்வே அரசு தனது கட்டளையை நிறுத்தி வைத்துள்ளது. ஜாவா மரியா சார்பில் ஆஜரான நோர்வேஜியரான சட்டத்தரணியுடன், நானும் சேர்ந்து ஜாவா மரியாவின் இனத்தைச்சேர்ந்த இலங்கையின் நாடற்ற தமிழர் நிலையை விபரமாக நோர்வேயின் நீதியமைச்சிடம் எடுத்து விளக்கினேன்.

‘’ஜாவாமரியா படிக்கும் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள், அரசின் கட்டளைக்கு எதிராக நோர்வேஜியன் தேசியக்கொடியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நமது நட்பு நாடான நோர்வேயிலன்றி வேறு எங்கேயாவது இதுநடைபெற முடியுமா? நோர்வே முழுவதுமுள்ள வேறுமாணவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நான் நூற்றுக்கணக்கான நோர்வே மாணவர்கள் மத்தியில் எமது நிலையை எடுத்துக் கூறினேன். அவர்கள் ஆதரவு அளிப்பதாக உறுதி தந்தனர்.

‘’மூன்ருவது உலக நாடுகளுக்கு கூடிய அளவு நன்கொடை வழங்கும் நாடுகளில் நோர்வேயும் ஒன்று. கடந்த 12 ஆண்டுகளாக இலங்கை அரசுக்கு பல நூறு கோடி பவுண்களை நோர்வே வழங்கியுள்ளது. இப்போது இலங்கையில் பல்வேறு திட்டங்களிலும் நோர்வேஜியர்கள் வேலை செய்கின்றனர். கடந்த மாதமும் 350 இலட்சம் பவுண் நோர்வே அரசினல் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்தப்பணத்தை முழுவதுமாக அம்பாந்தோட்டைக்கு செலவிட இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. நோர்வேஜிய அரசு வழங்கும் நன்கொடையில் தமக்குரிய பங்கை இலங்கையில் தமிழ்ப்பகுதிகள் பெறவில்லை.

இதை வெளிநாட்டைச் சேர்ந்த சர்வதேச பொருளாதார சமூக அபிவிருத்தித்துறை டைரக்டர் ஜெனரல் திரு. பால் பொக்கின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். அவரே வெளிநாட்டுதவிகளுக்குப் பொறுப்பானவர். தாம் இரண்டு கிழமைகளில் இலங்கைக்குப் போவதாகவும், அப்போது இலங்கை அரசுடன் தாம் இதுபற்றிப் பேசுவதாகவும் அவர் வாக்களித்தார்; அவருக்கும் நோர்வேஜிய தலைவர்களுக்கும், எமது தமிழர் இணைப்புக் குழு நன்றி தெரிவிக்கிறது’’

இவ்வாறு வைகுந்தவாசன் எழுதியுள்ளார்;

## “ஜனதிபதி —

—3-ம் பக்கத் தொடர்

என்றும்தமிழ்ஈழம் ஒரு விஞ்ஞான சோசலிச அரசாக இருக்கும் என்றும், அது உலக அரங்கில் ஏகாதிபத்தியத்தையும் இன ஒடுக்கலையும் எதிர்த்து ஏனைய ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளோடு சேர்ந்துபோராடும் என்றுகுறிப்பிட்டிருக்கிறது. இதறகு மக்களும் கடந்த பொதுத் தேர்தலில் ஆணை கொடுத்திருக்கிறார்கள். இதை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு கூட்டணிக்கும் குறிப்பாக இளைஞர் சமுதாயத்திற்கும் உண்டு.

கூட்டணி தமிழ் ஈழப் போராட்டத்தை ஜனநாயக வழிகளில் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது இளைஞர் சமுதாயம்புரட்சி வழிகளில் சென்று தமிழ் ஈழ இலட்சியத்திறகுப் போராடிக் கொண்டிருக்கிறது. சில செய்தி ஏடுகள் அரசாங்கம் கூட்டணிக்கு மந்திரிப் பதவிகளை வழங்கவிருப்பதாகக் கூறுகின்றது. கூட்டணி அப்படி அமைச்சர்பதவிகளை ஏற்கமுடியாது. தமிழ் மக்கள் அளித்த கட்டளையும், புரட்சிப் பாதையில் செல்லும் இளைஞர் சமுதாயமும், கூட்டணியும் ஆசைவார்த்தைகாட்டி மோசம் செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒரு பொழுதும் இடமளிக்கமாட்டாது என நம்புகிறோம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தோழர் தேவராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய த. இ. பேரவைசெயலாளர் மாவை சேனதிராசா இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கம்கறுவமாவத்தை (தொழிலாளர் பாதை)ஆசிரியர் வாகயடயஸ், மத்திய குழு உறுப்பினர் ஆனந்தவகும்பற, ஸ்ரீ கணேசதேவ் ஆகியோரும் உரையாற்றினர். இவர் உரைகள் பின்னர் வெளியிடப்படும்.

## அமைச்சர் மத்தியூவின் கவலை!

‘‘நல்லூர்வங்கிக்கொள்ளை நடந்து முடிந்து பத்து நிமிடங்கள் கழித்து இராணுவத்தினர் சிலர் அந்த வங்கிக்கு சென்றபோது அங்கு அவர்கள் கண்ட காட்சிஎன்ன? நல்லூர் வங்கியில் வேலை செய்யும் தமிழ் யுவதிகளும் இளைஞர்களும் கிண்டல் செய்துகொண்டும் சிரித்துக்கொண்டும் ஆடிப்பாடிக்கொண்டும் ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது காணப்படுவதுபோல் காணப்பட்டனர். அவர்களின் கண்ணெதிரே இரண்டு சடலங்கள் இரத்தம் வழிந்தோடக்காணப் பட்டன. இவையெல்லாம் கூட்டணியினர் கண்களுக்கு தெரிவதில்லை’’

—சிறில்மத்தியூ (பாராளுமன்றத்தில் 4,10,79)

யாழ் மாவட்டத்தில்
செய்தித் தணிக்கை
அவசரகாலச்சட்டம்
**இன்றுடன்**
**110-வது நாள்**

## வவுனியா மாவட்டத்தில் குடியேற்றவாசிகளை இராணுவம் வெளியேற்றுவதை உடன் நிறுத்தவேண்டும்

### ஜனதிபதிக்கு அமிர்தலிங்கம் கடிதம்

வவுனியா மாவட்டத்தில் குடியேறியிருக்கும் அகதிகளையும் குத்தகைக்காரர்களையும் தொழிலாளர்களையும் இராணுவம் வெளியேற்ற முற்பட்டிருப்பதை உடன் நிறுத்த உத்தரவிடக் கோரி ஜனதிபதிக்கும்காணி காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம்கடிதம் அனுப்பி வைத்துள்ளார்;

ஜனதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர்திரு, காமினி திசாநாயக்காவுக்கும் அவர் தனித் தனியே அனுப்பி வைத்திருக்கும் கடிதங்களில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது

‘‘தேசியஅரசாங்ககாலத்தில் 1968 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்கில் விசேஷ குத்தகைஒப்பந்தத்தில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன! அந்தக் குத்தகைகள் எதுவித முன்னறிவிப்பும் இன்றித் திடீரென ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன;

‘‘அந்தக் குத்தகைக்காணிகளில் பெரும் பகுதியைக் கடந்த அரசாங்கம் காணி சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் கையேற்றிருந்தது.

‘‘மீதியிருந்த காணிகளில் குத்தகைககாரர்கள் பெருமளவு பணத்தைச் செலவிட்டு நிலத்தை அபிவிருத்தி செய்தார்கள். நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கினர்கள்.

‘‘அகதிகளில் சிலரும் இந்தக் காணிகளில் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினர் அவர்களை அங்கிருந்து விரட்டுவதற்கு முற்பட்டிருப்பதால் அகதிகளும் குத்தகைக்காரர்களும் தொழிலாளர்களும் அதிர்ச்சியும்அச்சமும் அடைந்துள்ளார்கள்,

குத்தகைக்காரர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துரைத்துப் பரிகாரம் காணுவதற்கு அவகாசம் வழங்க வேண்டும்.

அதற்கேற்ற வகையில் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டுகிறோம். —என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

(தினபதி 26.10.79)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 34-ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது,